



கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மயிலாடி பேரூராட்சி, காமராஜர் நகரில், முருகேசன் என்பவரின் பட்டா நிலத்தில் வளர்ந்துள்ள சீமை கருவேல் மரம் அகற்றும் பணிகளை இன்று (11.02.2017) நேரில் சென்று பார்யிட்டு, ஆய்வு செய்தார். உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) திரு. முத்துகுமார் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 112/2017 நாள்: 11.02.2017

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மயிலாடி, அஞ்சுகிராமம், கன்னியாகுமரி ஆகிய பேரூராட்சிகளில், நடைபெற்று வரும் வளர்ச்சி பணிகள் மற்றும் சீமைக்கருவேல் மரங்களை அகற்றும் பணிகளையும், இன்று (11.02.2017) நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், கன்னியாகுமரி மாவட்டம், மயிலாடி பேரூராட்சியில், காமராஜர் நகர் என்ற இடத்தில், திரு. முருகேசன் என்பவரின் பட்டா நிலத்தில் வளர்ந்துள்ள சீமை கருவேல் மரம் அகற்றும் பணியினையும், மார்த்தாண்டபுரம் வடக்கு என்ற இடத்தை சார்ந்த திரு. சுப்பிரமணியன், திருமதி. புஷ்பம், மயிலாடிபுதூர் என்ற இடத்தை சார்ந்த திரு. செல்வராஜ் ஆகியோர்களுக்கு தலா ரூ. 2,10,000/- மதிப்பில் கட்டப்பட்டு வரும் பசுமை வீடுகளையும் இன்று (11.02.2017) நேரில் சென்று பார்யைிட்டு, ஆய்வு செய்தார்.

பின்னர் அஞ்சுகிராமம் பேரூராட்சியில், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு (2016-17) நிதியின் கீழ், ரூ. 5 இலட்சம் செலவில் ஜேம்ஸ் டவுனில் கட்டப்பட்டு வரும் பல்நோக்கு கட்டிட பணியினையும், ரூ. 12 ஆயிரம் செலவில் ஜேம்ஸ் டவுன் என்ற இடத்தை சார்ந்த திரு. நடராஜன் என்பவரின் வீட்டில் தனிநபர் கழிப்பறை கட்டி முடிக்கப்பட்ட பணியினையும், சங்கரலிங்கபுரம் என்ற இடத்தை சார்ந்த திரு. சிவனணைந்தபெருமாள், திரு. கணபதி ஆகியோர்களுக்கு பசுமை வீடு திட்டத்தின் கீழ், தலா ரூ. 2,10,000/- மதிப்பில் கட்டப்பட்டுள்ள பசுமை வீட்டினையும், திரு. ஆறுமுகம் என்பவரின் பட்டா நிலத்தில் வளர்ந்துள்ள சீமை கருவேல் மரம் அகற்றும் பணிகளையும் ஆய்வு செய்து, பின்னர் கன்னியாகுமரி பேரூராட்சியில், ஒற்றையார்விளை என்ற இடத்தை சார்ந்த திரு. சீதா தங்கராஜ், திரு. என்.முருகன், திருமதி. முத்துபாக்யலட்சுமி ஆகியோர்களுக்கு பசுமை வீடு திட்டத்தின் கீழ், தலா ரூ. 2,10,000/- மதிப்பில் கட்டப்பட்டுள்ள பசுமை வீடுகளையும், கலைஞர் குடியிருப்பு என்ற இடத்தை சார்ந்த திரு. மணி, மரு. கோபால ஆசான் ஆகியோர்களின் பட்டா நிலத்தில் வளர்ந்துள்ள சீமை கருவேல் மரங்களை அகற்றும் பணிகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் இன்று (11.02.2017) நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

ஆய்வின் போது, உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) திரு. முத்துகுமார், பேரூராட்சி செயல் அலுவலர்கள் திருமதி. லௌலின் மேபா (மயிலாடி), திரு. திருமலைகுமார் (அஞ்சுகிராமம்), திரு. சங்கர நாராயணன் (கன்னியாகுமரி) மற்றும் உதவி பொறியாளர் திரு. ஆர்.பாண்டியராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.